**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 130/2010**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 09.03.2026 |
| **பெயர்** | **சுரேஷ்** |
| **த/பெ** | **ஜெயராமன்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 01.00.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கை லலிதா, பிரேமா மற்றும் பரிமளா. யார் யாருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்து என்றால் சுரேஷ் மற்றும் ஜெயராமன். என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நிலம் எங்களுடையது என்று கூறி தாக்கல் செய்துள்ளார்கள். அதை தவிர வேறு பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என் நிருபணவாக்குமூலம் ஆங்கிலத்தில் தான் தாக்கல் செய்துள்ளேன். ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது.

2. என் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரததை யார் தயார் செய்தது என்றால் என் வழக்கிறிஞர் தயார் செய்தார் நான் அதில் கையொப்பம் இட்டேன். நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் என்ன விவரம் உள்ளது என்று தெரிந்த பிறகு தான் நான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். என் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள 2ம் பத்தியில் என்ன குறிப்பிட்டள்ளேன் என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. என் வழக்கறிஞர் என் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்களை என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை.

3. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் இடையன்சாவடி. இந்த சொத்துக்கள் வீட்டு மனை சொத்துக்கள் என்றால் சரிதான். என் தந்தையின் தந்தை பெயர் முனுசாமிரெட்டி என்றால் சரிதான். இந்த முனுசாமிரெட்டியின் வாரிசுகள் ரத்தன்ரெட்டி, கோவிந்தன், ஆறுமுகம், ஜெயராமன், வரதன் மற்றும் அபூர்வம்மாள் என்றால் சரிதான். மேலே சொன்ன ஜெயராமன் என் தந்தை என்றால் சரிதான். மேற்சொன்ன 6 நபர்களும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. அவர்களுக்கு வாரிசுகள் உள்ளார்கள். என் தாத்தாவின் 2ம் வாரிசான கோவிநதனின் வாரிசுகள் தான் 1 முதல் 3ம் வாதிகள் என்றால் சரிதான். 4ம் வாதியாக ரேனுகா வரதனின் மனைவி என்றால் சரிதான்.மேற்சொன்ன நால்வரும் சேர்நது தான் இந்த பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் 2/5 பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வாதிகள் முதலில் என் தந்தையின் பெயரில் மட்டும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் அவரின் இறப்பிற்கு பிறகு நாங்கள் அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். நாங்களும், தந்தையும் ஒரே குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான்.

5. 3ம் பிரதிவாதி என்னுடைய இளைய சகோதரர் என்றால் சரிதான். எந்த தந்தை காலமான பிறகு நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து தான் வசிக்கிறோமா என்றால் இல்லை தனித்தனியாக தான் வசிக்கிறோம். குடும்ப சொத்துக்களை பிரித்துக் கொண்டடோமா என்றால் என் தந்தையார் உயிருடன் இருந்த போதே குடும்ப சொத்துக்களை பிரித்துக்கொண்டோம். அவ்வாறு பிரித்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 01.14.p.m.**